# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

## வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

### தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக பொருத்தமான நிறுவனத்தை தேர்வு செய்தல்

பத்து (10) ஆண்டு காலத்திற்காக தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்கு புகழ்பெற்ற உள்ளூர் அமைப்பு அல்லது கூட்டமைப்பில் இருந்து ஆர்வ வெளிப்பாடு (EoI) மற்றும் முன்மொழிவுகளுக்கான கோரிக்கைக்கு (RfP) அழைப்பு விடுக்க உணவு ஆணையாளர் திணைக்களம் சார்பில் வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு **(MOTCFS)** தீர்மானித்துள்ளது.

ஒதுக்கப்பட்ட தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சியத் தொகுதி தம்புள்ளை பொருளாதார மத்தி நிலையத்திற்கு (DEC) அருகில் அமைக்கப்பட்டிருப்பதோடு அது 1.246 ஹெக்டயார் பகுதி ஒன்றில் கட்டப்பட்டுள்ளது. அது புத்தம்புதிய விவசாய உற்பத்திகளை களஞ்சியப்படுத்த முடியுமாக சுமார் 5000 மெட்ரிக் தொன்கள் முழுமையான கொள்திறனுடன் ஆறு (06) அறைகளைக் கொண்டுள்ளது.

தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்தின் நோக்கங்கள்

**பிரதான நோக்கங்கள்**

- விவசாயிகளின் உற்பத்திகளின் பாதுகாப்பு
- விலை ஏற்ற இறக்கங்களில் இருந்து உற்பத்திகளின் பாதுகாப்பு
- விவசாய உற்பத்திகளுக்காக நுகர்வோர் தொடர்ந்து முகங்கொடுக்கும் அதிகரிக்கும் விலை மட்டத்தை கட்டுப்படுத்தல்

**இரண்டாம் நிலை நோக்கம்**

- களஞ்சிய இடத்தை வெளியாதாரங்களுக்கு வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு வாடகை வருவாயை உருவாக்கல்.

ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு முதலீட்டாளர்கள் பின்வரும் குறைந்தபட்ச தகைமை அளவுகோல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **பொதுவான அனுபவம்:-** உணவுப் பிரிவுக்கான களஞ்சியங்களை செயற்படுத்தல் மற்றும் நிர்வகித்தலில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனுபவம்
- **பிரத்தியேக அனுபவம்:-** உணவுப் பிரிவுக்கான தேசிய/ சர்வதேச தட்பவெப்ப நிலை கட்டுப்பாட்டு களஞ்சியங்களின் செயற்படுத்தல் மற்றும் நிர்வகித்தலில் குறைந்தது ஓர் ஆண்டு அனுபவம்
- விவசாய அடிப்படையினால் உற்பத்திகளில் சராசரி குறைந்தபட்ச ஆண்டுப் புரள்வு 100 மில்லியன் இ. ரூபா இருத்தல் வேண்டும்.

மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த மற்றும் ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக தமது ஆர்வ வெளிப்படுத்தல் மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை இனை சமர்ப்பித்தல் வேண்டும். ஆர்வத்தை வெளிப்படுத்தல் மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை இனை சமர்ப்பிப்பதற்கு முன், மேலும் அந்த விண்ணப்பதாரர்கள் விபரங்களைப் பெறுவதற்கு **2024 ஓகஸ்ட் 05 தொடக்கம் 07 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 01.00 வரை** குறித்த இடத்திற்கு வருகை தர முடியும். எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்கள் MOTCFS இணையதளத்தில் இருந்து (https://www.trade.gov.lk/downloads/ministry-notifications) ஆங்கில மொழியில் ஆர்வத்தை வெளிப்படுத்தல் மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை இனை தரவிறக்கம் செய்ய முடியும்.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் **2024 ஓகஸ்ட் 26 ஆம் திகதி பி.ப. 03.00** அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, இடைமட்ட மாடி, இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03 என்ற முகவரிக்கு **"தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக பொருத்தமான நிறுவனத்தின் தேர்வு EoI/ RfP"** என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு வெவ்வேறு கடித உறைகளில் முத்திரை பொறிக்கப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தல மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை விண்ணப்பங்களை (மென் பிரதிகள், PDF வடிவம், CD) பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். இறுதி நேரம் முடிவுற்ற பின் ஆர்வ வெளிப்படுத்தல் விண்ணப்பங்கள் உடன் திறக்கப்படும் என்பதோடு ஆர்வ வெளிப்படுத்தல்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு எந்த ஒரு விண்ணப்பதாரர்/ அல்லது அவர்தம் அதிகாரம் பெற்றவர் பங்கேற்க முடியும். தகுதி பெற்ற ஆர்வ வெளிப்படுத்தல் விண்ணப்பதாரர்களின் முன்மொழிவுக் கோரிக்கை பின்னர் திறக்கப்படும் என்பதோடு அந்தத் திகதி நிறுவனங்களுக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

இந்தப் பெறுகைக்கான விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024 ஓகஸ்ட் 07 ஆம் திகதி மு.ப. 11.30 இற்கு தம்புள்ளை பிரதேச செயலாளர் அலுவலக, கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.**

தெளிவை பெறுவதற்கு, தொ.- +94 011-2304049, மின்னஞ்சல் - **foodcommissioner@gmail.com உணவு ஆணையாளர்/ 0112 110577 தலைமை கணக்காளரை** தொடர்பு கொள்ளவும்.

அமைச்சு பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**
**வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**
**இல. 492, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,**
**கொழும்பு 03.**

2024.07.25